2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஏற்கெனவே செவிலியர் கல்லூரியும் இருக்கின்றது, செவிலியர் பயிற்சிப் பள்ளியும் இருக்கின்றது. மாவட்டத்திற்கு ஒன்று என்பது இந்த அரசின் இலக்கு. உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல தொகுதிக்கு ஒன்று என்பது சாத்தியம் இல்லாத ஒன்று. இருந்தாலும் இதுகுறித்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

நவீன விளையாட்டு மையம்

***11980—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதியில் நவீன விளையாட்டு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதியில் நவீன விளையாட்டு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2022 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று சொல்கிறார்கள். கோவை நகரம் இன்று சென்னைக்கு அடுத்தபடியாக வளர்ந்துவரக்கூடிய ஒரு நகரம். சென்னைக்கு சரிசமமாக இன்று வரிவசூலிலும் நாங்கள்தான் உங்களோடு போட்டி போட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நகரத்தில் விளையாட்டு மைதானமே இல்லை. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒன்றே ஒன்று, நேரு ஸ்டேடியம் மட்டும்தான் இருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனம் வைத்தால் கண்டிப்பாக அங்கு ஒரு நவீன விளையாட்டு மைதானம் அமைக்கலாம் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சென்னையில் பல்வேறு உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மைதானங்களை அமைத்து வருகின்றார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பார்வையும் அடுத்தகட்டமாக கோயம்புத்தூரில்தான் இருக்கின்றது. அந்தப் பகுதியில் விளையாட்டு அரங்கங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அண்மையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அங்கிருக்கின்ற விளையாட்டு அரங்கத்தை ஆய்வு செய்யச் சொன்னார். அந்தக் கருத்தின் அடிப்படையில் நேரு விளையாட்டு அரங்கத்தில் ஆய்வு மேற்கொண்டோம். அங்கு பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல் அங்கிருக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், முன்னாள்

2022 ஏப்ரல் 20]

விளையாட்டு வீரர்கள், சமூக ஆர்வலர்கள் எல்லாம், "இதுபோன்ற வசதிகள் போதாது, கூடுதலாகவும் வசதி தேவைப்படுகிறது; குறிப்பாக நேரு விளையாட்டரங்கம் அருகில் ஒரு பன்னோக்கு உள் விளையாட்டரங்கம், சர்வதேசத் தரத்திலான ஒரு நீச்சல் குளம், மாணவர்களுக்கான விளையாட்டு விடுதிகள் எல்லாம் வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள். அதனை உடனடியாகக் கருத்தில் கொண்டு, அந்த நேரு விளையாட்டரங்கம் எதிரிலேயே 4 ஏக்கர் இடம் கண்டறியப்பட்டு, இந்த வசதிகளை எல்லாம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அதுவும் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல கோயம்புத்தூரைப் பொறுத்தவரைக்கும் ஆர்.எஸ். புரம் Hockey வீரர்கள் நிறைந்த பகுதி. அங்கே கடந்த காலத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒரு Hockey மைதானம் தொடங்கப்பட்டு இடையில் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. நேரடியாக அங்கேயும் ஆய்வு மேற்கொண்டு Hockey மைதானம் தொடர்பான பணிகளை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற, கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதியில் நவீன விளையாட்டு மைதானம் அமைப்பதைப் பொறுத்தவரையில், 6 அல்லது 7 ஏக்கர் இடம் தேவைப்படுகிறது. அந்த இடத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்படைக்கும்பட்சத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துருக்கள் பெறப்படின், அந்தப் பகுதியில் ஒரு நவீன விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.

[*2022 ஏப்ரல் 20*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வடவள்ளியிலிருந்து ஓணான்பாளையம் செல்லும் வழியில் 80 அடி ரோட்டில் 10 ஏக்கர் நிலம் உள்ளது. அது அரசு புறம்போக்கு நிலம். அந்த இடத்தை நீங்கள் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். உங்களுக்குத் தேவையான இடம் அங்கேயிருக்கிறது.*

அதற்கடுத்தபடியாக, வடவள்ளி பஸ் ஸ்டாண்டிற்கு பின்புறம் 4 ஏக்கர் நிலம் உள்ளது. நான் முதலிலேயே சொன்னேன், மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று. நீங்கள் நினைத்தால் கண்டிப்பாக அந்த இடத்தில் அமைக்கலாம். ஏனென்றால் நேரு stadium*–லிருந்து, 25 கிலோ மீட்டர் தூரத்தில் மருதமலைக்கு அருகில் உள்ளது, நான் கேட்கின்ற இடம், கலைக் கல்லூரி, வேளாண் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், சட்டக் கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி போன்ற பலவகையான கல்லூரிகள் அதிகமாக உள்ள இடமாகும். அங்கு மாணவச் செல்வங்கள் அதிகமாக உள்ளதால்தான், நான் அந்த இடத்தில் நவீன விளையாட்டு மைதானம் கேட்கின்றேன். நீங்கள் தயவுசெய்து அந்த இடத்தை ஆய்வு செய்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *'மறுபரிசீலனை செய்வீர்களா என்று கேட்டுக்கொள்கின்றேன்', அவ்வளவுதானே!*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *இருங்கள். அவர் ஒரு குற்றச்சாட்டு சொன்னார், அதற்கு ஒரு பதிலும் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குற்றச்சாட்டு. . .*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *அவர் சொன்னார்.* R.S. *புரத்தில்* Hockey *மைதானம், எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அங்கிருக்கும்போது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மறுபரிசீலனை செய்வீர்களா என்று கேட்டு அமருங்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *சொல்லிவிடுகிறேன் ஐயா.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்றவற்றையெல்லாம் நாம்* debate*–ல் பேசிக்கொள்ளலாம்.*

2022 ஏப்ரல் 20]

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *அதாவது* Hockey *மைதானம், **அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் அது நிறுத்தி வைக்கப்படவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லிவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓணான்பாளையம் பகுதியில் 10 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான இடம் இருப்பதாகவும், அதேபோல வடவள்ளி பேருந்து நிலையம் அருகில் 4 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான இடம் இருப்பதாகவும் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *அந்த இடத்தை நேரடியாக ஆய்வு செய்து, வாய்ப்பு இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப, அந்தப் பகுதியில் நவீன விளையாட்டு மையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

140—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***25288—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*